# தூதன்

தூதன்-24 டிசம்பர் 2015 தூது-11

Merry Christmas

"இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்."
லூக்கா 2:11



## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| செயலர் மடல் | 10 |
| இயேசு பிறந்த நாள் | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| தேவ அன்பு | 14 |
| ஆராதனை பாடல்கள் | 15 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| தெரிந்து கொள்வோம் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| Great Warriors for Christ | 24 |
| Health Tips | 26 |
| Childrens Corner | 28 |
| மகிழ்ச்சி மாத சிறப்பு நிகழ்ச்சிகள் | 30 |
| Birthday Celebrants | 31 |
| Wedding Anniversary Celebrants | 33 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

# சபை போதகர் மடல்

## கிறிஸ்து பிறப்புத் திருநாள்

இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி,
இதுவே உம் மக்களாகிய இஸ்ரவேலுக்குப் பெருமை. லூக்கா 2:32.

கிறிஸ்துவுக்குள் எனதருமை விசுவாசிகளே, திரித்துவக் கடவுளின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்களையும், கிறிஸ்துமஸ் புத்தாண்டு கால மகிழ்ச்சியையும், அமைதியையும் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மனநிறைவடைகின்றேன்.

இரண்டு கேள்விகள் என்னிடம் பல நண்பர்களால் கேட்கப்பட்டன.

1. கடவுளுக்கு எல்லா ஆற்றலும் இருக்கும்போது அவர் ஏன் மனிதனாகப் பிறந்து சிலுவையில் மரித்து உலகை மீட்கவேண்டும்?
2. கிறிஸ்துமஸ் பண்டிகை ஏன் டிசம்பர் 25-ம் நாளில் கொண்டாடப்படுகிறது?

### கிறிஸ்துமஸ் என்றால் என்ன? (What is Christmas?)

முதலில் கிறிஸ்துமஸ் பண்டிகையின் பாரம்பரியத்தை நோக்கலாம். CHRIST MASSE என்றழைக்கப்படும் இலத்தீன் பதத்திற்கு கிறிஸ்து வெளிப்பட்டார், மீட்பர் வெளிப்பட்டார் என்று பொருள். இயேசு ஆண்டவர் மேசியாவாக வெளிப்பட்டதை கிறிஸ்துமஸ் (Christmas) வழிபாடாக உரோமையர்கள் கொண்டாடத் தொடங்கியதுதான் கிறிஸ்துமஸ் என்ற பெயரின் துவக்கம். எந்த ரோம அரசு கிறிஸ்துவின் அடியவர்களைத் துன்புறுத்தியதோ, அதே ரோம அரசின் தலைசிறந்த அரசர்களுள் ஒருவரான பேரரசர் கான்ஸ்டன்டைன் அவர்களும், அவரை வழிநடத்தின அவரது தாயார் கேத்தரின் அம்மையார் அவர்களும் கிறிஸ்துவின் திருக்காட்சியால் தொடப்பட்டு, கிறிஸ்தவ நம்பிக்கை ரோம அரசு எங்கும் பரவியது. கிறிஸ்துவின் பிறப்பு பெரிய விடுதலை, அமைதி, மகிழ்வின் விழாவானது.

### கிறிஸ்துமஸ் எப்பொழுது கொண்டாடப்படுகிறது? (When is Christmas?)

டிசம்பர் 25-ல் ஏன் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுகிறது? அந்தத் தேதியில்தான் இயேசு பிறந்தாரா? போன்ற கேள்விகளுக்கு விடையளிக்கும் வண்ணம் இயேசுவின் பிறப்பின் சில பாரம்பரியங்களைக் காணலாம். தேதி பற்றிய வரலாற்றுக்குறிப்புகள் இல்லாவிடினும் வரலாற்றுப் பாரம்பரியங்கள் மற்றும் காலச்சூழல்கள் அடிப்படையில் இந்நாள் குறிக்கப்பட்டுள்ளது.

1. மார்ச் 25-ம் நாள் ஆதிக் கிறிஸ்தவப் பாரம்பரியங்களிலே மரியாளுக்குக் காபிரியேல் தூதன் காட்சி தந்து கிறிஸ்து அவர் தம் வயிற்றில் உருவான நாளாகக் கணித்தனர். அதிலிருந்து ஒன்பது மாதங்களைக் கணக்கிட்டு டிசம்பர் 25-ம் நாள் கிறிஸ்துமஸ் / கிறிஸ்து பிறப்பு கொண்டாடப்பட்டதாகப் பாரம்பரியம் ஒன்று கூறுகிறது.

2. ரோமப்பாரம்பரியத்தின்படி பனிக்காலம் முடிந்து வசந்தகாலம் துளிர்க்கின்ற காலத்தின் முன்னறிவிப்பாக 25-ம் நாள் கணக்கிடப்பட்டு அந்நாள் சூரியத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது.

பேரரசர் கான்ஸ்டன்டைன் காலத்தின்போது "நீதியின் சூரியனாகப்" பிறந்த இயேசு பெருமானின் பிறப்பை அந்நாளில் பண்டிகையாகக் கொண்டாடின பாரம்பரியமும் வரலாற்றில் பதிக்கப்பட்டுள்ளது.

3. கிரேக்கரின் அறுவடை விழாவான சத்தூரிஸ் ஜனவரி மாதம் 6-ம் நாளில் கொண்டாடப்படுகிறது. இறைவன் தன்னையே வெளிப்படுத்தின திருநாளாகக் கிரேக்கர்களால் இந்நாள் கருதப்படுகிறது. ஆகவே இயேசு தன்னை உலகிற்கு கிறிஸ்துவாக, மேசியாவாக, மீட்பராக வெளிப்படுத்தின எபிப்பெனி (Epipheny) நாளை கிழக்கிந்திய வைதீக சபையினர் கிறிஸ்து பிறப்பு நாளாகக் கொண்டாடுகின்றனர்.

4. ஆனால் புனித அகுஸ்தீன் மற்றும் போப் ஜூலியஸ் போன்ற ஆதித்திருச்சபைத் தலைவர்கள் ரோமப்பண்டிகையான சாட்டர்ன்லியா (Saturnlia) என்ற சாட்டர்ன் (Saturn) தெய்வத்திற்கான அறுவடைப்பண்டிகையின் சிறப்பு நாளான டிசம்பர் 25-ம் நாளை கிறிஸ்துமஸ் நாளாக ஐரோப்பிய மேற்கத்திய நாடுகளில் அதிகாரப் பூர்வமாக அறிவித்தனர்.

5. யூத வரலாற்றில் டிசம்பர் 25-ம் நாள் (கிஸ்லெவ் மாதம்) ஹனுக்கா (Hanukkah) என்கிற எருசலேம் திருக்கோயிலைச் செப்பனிட்ட மறுமங்கலப் படைப்புத் திருநாளாக கி.மு.165-ல் கொண்டாடப்பட்டது. கிரேக்கர்களால் தீட்டுப்படுத்தப்பட்டு சேதம் விளைவிக்கப்பட்ட தேவாலயத்தைத் தூய்மைப்படுத்திய திருநாளானதால் யூத கோத்திரத்தில் பிறந்து தேவாலயத்தையும், முழு மனுக்குலத்தையும் ஆன்மீக, சமூக பாவ அடிமைத்தனத்தினின்று விடுதலை செய்ய வந்த கிறிஸ்துவின் பிறப்பு டிசம்பர் மாதம் 25-ம் தேதி கொண்டாடப்பட்ட பாரம்பரியமும் உண்டு.

### கிறிஸ்துமஸ் ஏன் கொண்டாடப்படுகிறது? (Why is Christmas?)

கிமு என்றும் கிபி என்றும் வரலாற்றை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்த இயேசுகிறிஸ்துவின் பிறப்பு ஒரு மகிழ்ச்சியின், உலக அமைதியின், இணக்கத்தின், சகோதரத்துவத்தின், மனித மாண்பின், சமத்துவத்தின் விழாவாகும். கடவுளின் உறவினின்று பிரிந்த மனுக்குலம் அமைதியிழந்து சமயம், மொழி, இனம், சாதி, கலாச்சாரம், ஏற்றத்தாழ்வு, தீவிரவாதம், சுயநலம், சண்டை, பாலின பேதம், ஆணாதிக்கம் போன்ற பல தீமைகள் ஒருங்கிணைந்த பயங்கரமாக உருவெடுத்துவிட்டது. இந்நிலையில் இவ்வுலகில் அமைதி, அன்பு, நீதி, ஒப்புரவாகுதல், சமத்துவம், பகிர்வு, எளிமை, தாழ்மை போன்றவைகளை ஏற்படுத்தப் பிறந்த அமைதியின் அரசர்தான் (ஏசாயா 9:6) இயேசு கிறிஸ்துவானவர். அவரது பிறப்பு ஒரு புதிய மானுடத்தை ஏற்படுத்தும் என கொடுக்கப்பட்டிருந்தது (ஏசாயா 11:1-9). அது அவரது பிறப்பிலிருந்து நிறைவேறியது என்பதை எளிமையான கன்னிமரியும், அடையாளம் காணப்படாத மேய்ப்பர்களும் கண்ட திருக்காட்சிகளிலிருந்து அறியலாம் (லூக்கா 2:1-20). இன்று அர்த்தமுள்ள கிறிஸ்துவை சொல்லில் மட்டுமல்ல, இணக்கமான செயல்களில், பண்புகளில் வெளிப்படுத்தி கிறிஸ்துவைப் பறைசாற்றுவோம்! இயற்கைச் சீற்றத்தினாலும், தீவிரவாதத்தினாலும் பாதிக்கப்பட்ட எளிய மக்களின் நல்வாழ்வே நம் வாழ்வு என்றுணர்ந்து பகிர்ந்து, கிறிஸ்துவை வெளிப்படுத்துவோம். ஆமென். "The real power is in powerlessless."



இறைப்பணியில் ஆயர்
அருள்திரு.S.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

## கன்னித்தாய் மரியாள் (Virgin Mother)

அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் புதிய மாத நல்வாழ்த்துக்கள். கடந்த பதினொரு மாத காலம் நம்மைக் கரம்பிடித்து வழிநடத்தி வந்த நம் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். நாம் சாய்ந்து வீழ்ந்துபோன நேரத்திலும், பெலனற்றுப்போன நேரத்திலும், சோர்ந்து போன நேரத்திலும், நம்மை அரவணைத்து, கண்ணீரிலே உடனிருந்து, தனிமையிலே துணைநின்று, துயரத்திலே ஆறுதல் தந்து, அதே நேரம் நம்மைச் சமாதானத்திலும், மகிழ்ச்சியிலும் நிரப்பின தாய் போன்ற அன்புடைய, தந்தை போன்ற அருளுடைய கடவுளைத் துதிப்போம்.

இம்மாதம் நம் அனைவருக்கும் குதூகலத்தின் கொண்டாட்டத்தின் மாதம்! ஆம், இது கிறிஸ்து பிறப்பு மாதம். உலகமே கொண்டாடும் மீட்பரை இப்பூமியில் தந்தருளின தந்தையாம் கடவுளுக்கு நன்றி சொல்லும் அதே வேளையில், இரட்சகரைப் பெற்றெடுத்த கன்னித்தாய் மரியாளின் பங்களிப்பை மறந்துவிடக்கூடுமோ?! இவர் பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர். அவர் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. (The woman honoured above all women).

யூதா கோத்திரத்தில், தாவீது வம்சத்தில் பிறந்தவர் மரியாள். நாசரேத் என்னும் சீரிய ஊரிலிருந்து நன்மை பிறக்கக்கூடுமோ (யோவான் 1:46) என்ற கேள்விக்கு விடையாக எளிய கிராமத்துப் பெண்ணான இக்கன்னி மரியாள் உலகில் விடிவெள்ளியான மீட்பர் இயேசுவை அளித்தவர். "ஆண்டவரின் தாய்" என்று அனைவராலும் போற்றப்பட்ட இவர் இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர். (What a great privilege and blessing to Mary).

லூக்கா 1:28-ன்படி தேவதூதரின் செய்தியை உள்வாங்கி பரிசுத்த ஆவியினால் நிறைந்து இயேசுவின் கருவைச் சுமக்க மரியாளுக்கு தகுதிகள் இருந்திருக்க வேண்டுமல்லவா! அவர் சிறுவயது தொடங்கி கடவுள் பக்தியிலே வளர்ந்திருக்க வேண்டும், பரிசுத்தமாய் வாழ்ந்திருக்க வேண்டும், அவரது கபடற்ற, மாசில்லாத, எளிமையான வாழ்வு தேவமைந்தனை அவர் சுமக்க ஏற்புடையதாய் இருந்திருக்க வேண்டும். கிறிஸ்துவைச் சுமக்க விரும்பும் எந்தப் பெண்ணிடமும் அல்லது எந்த ஒரு மனிதரிடமும் கடவுள் எதிர்பார்ப்பது இப்பண்புகளே.

பூமியில் வாழ்ந்த காலத்தில் இளம் பிராயத்திலேயே கடவுளின் அழைப்பு அவருக்கு வருகிறது. கன்னி கழியாமல் இருக்கும்போதே மீட்பின் திட்டத்தைத் தொடங்கிய பெண் இவரே. Mary is the salvation and God choose her when she was a teenage girl. திருமணம் ஆகாமலேயே குழந்தையை வயிற்றில் சுமப்பது என்றைக்குமே ஏற்றுக்கொள்ளமுடியாத, ஒரு நிந்தையான நிலை. ஆனால் ஊர் பேச்சுக்கு இடம் கொடுக்காமல், அவமானத்தைப் பொருட்படுத்தாமல், கர்த்தரின் அழைப்பை நிச்சயமாய் உணர்ந்து, கர்த்தருக்குப் பயந்து, கீழ்ப்படிந்த தியாகப் பாத்திரமே மரியன்னை. கர்த்தருக்குப் பயப்படுகிற பெண்ணே புகழப்படுவாள் (நீதி.31:30).

மரியாளிடம் நாம் கற்கவேண்டிய பாடங்கள் பல. அவைகளில் சில: அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல், தியாகம், பரிசுத்தம், ஆயத்தம், ஒப்படைப்பு. ஆகவே மரியாள் பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவர் (லூக்கா 1:28), கடவுளிடம் கிருபை பெற்றவர் (லூக்கா 1:35), இறை ஆசியை வழங்கியவர் (லூக்கா 1:42), விசுவாசத்தின் வாய்க்கால் (லூக்கா 1:45), கடவுளை என்றும் மகிமைப்படுத்திய அடையாளம் (லூக்கா 1:46).

கர்த்தருக்குப் பயந்து மட்டுமல்ல, கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றி மரியாள் தன் பிள்ளையை பெற்று வளர்க்கிறாள். இன்றைக்கு நாம் பெற்ற பிள்ளைகளை யாருக்காக வளர்க்கிறோம்? கடவுளுக்கு மகிமை செலுத்துகிற பிள்ளைகளாக வளர்க்கிறோமா? தீமையை வெறுத்து நன்மை செய்ய கற்றுக் கொடுக்கிறோமா? சுயநலமின்றி கடவுள் பயத்திலும், பக்தியிலும், பரிசுத்தத்திலும் வளர்க்கிறோமா? சிந்திப்போம்! செயல்படுவோம்!

வாழ்வோம் மரியாளைப்போல, வளர்ப்போம் பிள்ளைகளை மரியன்னை போல. ஆமென்.

திருமதி. தீபா கிறிஸ்தோபர்.
ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி.



## வேத வகுப்பு ஆராய்ச்சி

பண்டிகை கால நிகழ்வுகளை முன்னிட்டு
வேத வகுப்பு ஆராய்ச்சி
புதிய ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைபெறும்

## ஆங்கில ஆராதனை

முதல் மற்றும் மூன்றாம் வாரம் வெள்ளிக்கிழமை தோறும்
காலை 6:00 மணி முதல் 7:15 மணி வரை
திருவிருந்து ஆராதனை ஆங்கிலத்தில் நடைபெறும்.

வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் கொண்ட சர்வ வல்ல கடவுளின் திருப்பெயரால் விசுவாச வீட்டார் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்களை எம் குடும்பத்தின் சார்பில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திருமறை ஆய்வு - ரோமர் 13-ம் அதிகாரம்

"அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது. ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (ரோமர் 13:10)

கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் நடைமுறையில் கடைபிடிக்க வேண்டிய சில முக்கியமான செயல்களை அப். பவுல் இவ்வதிகாரத்தில் 2 பிரிவுகளாகக் குறிப்பிடுகிறார்.

### 1. அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியும் அன்பு

"எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன், ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது" (ரோமர் 13:1)

அரசுக்கும், அதிகாரங்களுக்கும், அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கு நற்செய்தி நூற்கள் எத்தனையோ உதாரணங்களைத் தருகின்றன. அவைகளிலொன்று, மத்தேயு 17:24-27 வரையுள்ள வசனங்களில் குறிப்பிடப் பட்டுள்ள "இயேசுவும் அவரது சீடரும் ஆலய வரி செலுத்தும் நிகழ்வு". எருசலேமிலிருக்கும் தேவாலயத்தை பராமரிப்பதற்காக வருடத்திற்கு ஒருமுறை 20 வயதிற்கு மேற்பட்ட எல்லா யூத ஆண்களும் அரை சேக்கல் ஆலயவரியாக செலுத்தவேண்டும் (யாத். 30:11-16). அதை தாம் வசிக்கும் பகுதியில் நியமிக்கப்பட்டுள்ள ஆலயவரி வசூலிப்பாளரிடத்திலோ அல்லது எருசலேம் தேவாலயத்திலோ செலுத்தலாம். அரை சேக்கல் என்பது ஒரு பெரிய தொகையல்ல. அது ஒரு பணியாளரின் 2 நாள் வருவாய்க்கு சமமானது. சுமார் 14.2 கிராம் எடையுள்ள வெள்ளி நாணயமாக இருக்கும். ஒருமுறை கப்பர்நகூமில் பேதுருவை சந்தித்த வரிப்பணம் வாங்குகிறவர்கள், உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா? என்ற கேள்வியைக் கேட்டனர். செலுத்துகிறார் என்று பேதுரு பதில் சொன்னாலும் இயேசுவிடம் பேசும்போது வரிப்பணம் செலுத்தப்படவில்லை என்பது தெளிவாகியது. "தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார்" (மத். 12:6) என தன்னை அறிமுகப்படுத்தியவர், "என்னுடைய வீடு ஜெபவீடு" (மத். 21:12,13) என உரிமை கொண்டாடியவர், நாம் யாருக்கும் இடறலாயிருக்கக்கூடாது என 1 சேக்கல் எடையுள்ள வெள்ளிப் பணத்தை மீனின் வாயிலிருந்து எடுத்து தனக்கும், பேதுருவுக்கும் உரிய வரிப்பணமாக செலுத்த பேதுருவுக்குக் கட்டளைக் கொடுக்கிறார். மற்றொன்று, பரிசேயர் இயேசுவை பேச்சிலே அகப்படுத்தும்படி போதகரே, உமக்கு எப்படி தோன்றுகிறது? இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ, அல்லவோ? அதை எங்களுக்கு சொல்லும் என்று கேட்டனர். இயேசு, "இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்று சொல்லி அவர்களுக்கு பதில் அளித்தார். (மத். 22:15-22). இங்கே மேற்குறிப்பிடப்பட்ட இயேசுவின் பதில்கள் அரசின் அதிகாரங்களுக்கும், ஆலய பொறுப்புக்கள் வகிப்போருக்கும் இணங்கி நடக்க படிப்பினையைக் கற்றுத் தருகிறது.

பவுலடியாரும் இதுகுறித்து சில ஆலோசனைகளை நமக்குத் தருகிறார்.
அ) அதிகாரம் வகிப்போர் அனைவரும் கடவுளுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதை மறவாதிருங்கள். (வ.1)
ஆ) அதிகாரங்களுக்குப் பின்னணியில் தேவகரம் இருப்பதை உணர்ந்து கொள்ளுங்கள். (வ. 2)
இ) அறச்செயல்கள் செய்து பாராட்டு பெறுங்கள். (வ. 3.4)
ஈ) அற்ப ஆதாயங்களுக்காக நல்மனசாட்சிக்கு துரோகம் செய்யாதிருங்கள். (வ. 5-7)

## 2. அடுத்தவரை நேசிக்கும் அன்பு

ரோமர் 13:8,9 ஆகிய இரு வசனங்களிலும் பவுலடியார் அடுத்தவரை நேசிக்கும் அன்பில் பெருகிட அவசியமான 2 செயல்களைக் குறிப்பிடுகிறார்.

அ) கடன்படாதிருங்கள்: ஒருவரிடத்தில் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் (ரோமர் 13:8). விசுவாசிகள் எப்பொழுதுமே தங்கள் வருமானத்திற்குள் வாழ்வது மிக முக்கியம். மனம் விரும்புவதையெல்லாம் வாங்காமல் தேவையானதை மட்டும் வாங்குதல் நலம். உங்கள் செலவைத் திட்டமிட்டு செயல்படுத்துங்கள். நாம் கடன்படுவதற்கு மற்றொரு காரணம் மல்கியா 3:8-12 வரையுள்ள வசனங்களின்படி நம் வருமானத்தில் கடவுளைக் கனம்பண்ணாததுதான். செய்து பாருங்கள்.... ஆசீர்வாதங்கள் தொடரும். சாபங்கள் அகலும். பிறரிடம் கடன்படாமல், அன்பை முறிக்கும் தன்மைகொண்ட கடன்வாங்குதலைத் தவிர்த்தல், அடுத்தவர்க்கிடையே அன்பைப் பெருகச்செய்யும்.

ஆ) கறைபடாதிருங்கள்: அப்.பவுல் ரோமர் 13: 9-14 வரை எழுதியுள்ள வசனங்கள் யாவையும் ஒருங்கிணைத்து படித்தால், கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, கறைபடாமல் வாழ்ந்து, கர்த்தரிடத்தில் அன்பு செலுத்த ஆலோசனை வழங்குகிறார். பிறர் உங்களுக்குச் செய்யக்கூடாதென்று விரும்புவதை நீங்கள் அவர்களுக்குச் செய்யாதிருங்கள். நம்மிடம் குறைகள் பல இருந்தாலும், நமது பெயர் எந்தச் சூழ்நிலையிலும் கெட்டுப்போகக் கூடாதென்பதில் மிக கவனமாய் இருக்கிறோம். ஆனால், பிறரைக் குறித்த காரியங்களையும் அவர்களது குணங்களையும், தோல்விகளையும் பெரிதுபடுத்திப் பேசுவதில் நமக்கு பெருமகிழ்ச்சி. கிறிஸ்தவர்கள் பிறருக்கு முன்பாக கிறிஸ்துவின் நடமாடும் நிருபங்களாய் இருக்கவேண்டும். ஏன்? 2 காரணங்கள் உண்டு. 1) கடவுளின் திருப்பெயர் நம் வழியாக இகழப்படாமல் இருக்க 2) உலகத்தின் முடிவு நெருங்குகிறது (வ. 11-14). மகிழ்ச்சியோடும், களிப்போடும் வாழ்க்கையை அனுபவித்தலைக் குறித்து வேதம் குற்றம் சாட்டவில்லை. ஆனால், உலகம் ஓர் அவசரக்கட்டத்தினுள் வந்திருக்கிறதென்பதைத் திருச்சபை உணர்ந்து கொள்ளவேண்டும். பாவ இச்சைகளினால் முடமாயிருக்கும் இவ்வுலகம் உதவிக்காய் கைநீட்டிக் காத்திருக்கிறது. “எங்களை நோக்கிப் பார்” என அறைகூவி அழைத்து உதவ இன்றைய திருச்சபை ஆயத்தமா?

அன்பர்களே, கிறிஸ்து பிறப்பின் கொண்டாட்டத்தை எதிர்பார்த்திருக்கும் நமக்கு, “கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்”” என்னும் செய்தியை அழுத்தமாகச் சொல்கிறார் பவுலடியார். இம்மானுவேலரின் துணையோடு வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்வை அலங்கரிப்போம். ஆமென்.

இறைப்பணியில் உங்களுடன்,
அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.



# உதவி ஆயரம்மா மடல்

பாவங்களை வெறுத்தாலும் பாவிகளை நேசிக்கிற இறைமகன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அனைவருக்கும் அன்புடன் வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பாடல் சொல்லும் வரலாறு

### பாவி கேள்! உன் ஆண்டவர்.....Hark my soul it is Lord

"தாயினும் மிக்க பாசமுள்ளவர்" நமதாண்டவர் என்றும், அவர்மேல் நாம் பற்றுதல் உள்ளவர்களாய் இருக்க வேண்டுமென்றும் உள்ளமுருக இப்பாடலைப் பாடியவர் வில்லியம் கூப்பர். 1731-ம் ஆண்டு பிறந்த இவர் 6 வயது நிரம்பியவராக இருக்கும்போது தம்முடைய தாயை இழந்தார். தம்மிடம் அவர்கள் செலுத்தின அன்பை நினைத்து அடிக்கடி சிந்தித்து மனதுருகுவார். அவர்கள் இறந்து சுமார் 53 ஆண்டுகளுக்குப் பின், அவருடைய உறவினர்களில் ஒருவர் அவருடைய தாயின் படமொன்றை கூப்பருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். அதனை வாங்கிய கூப்பர் மறுபடியும் தம்முடைய தாயை நினைவுகூர்ந்து பாடலொன்றினை எழுதத்தொடங்கினார். அதுவே இப்பாடல்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது மற்ற சிறுவர்களைப் போல அவரால் மகிழ்ச்சியாய் இருக்க முடியவில்லை. காரணம், தந்தையின் துணையுமில்லை, தாயின் அரவணைப்புமில்லை. அடிக்கடி நோய்வாய்ப்படும் சிறுவனாகிய கூப்பரை மற்ற சிறுவர்கள் மிகவும் துன்புறுத்தி வந்தனர். சிலசமயங்களில் அழுது அழுது கண்கள் வீங்கிப்போவதுமுண்டு. பெலவீனப்பட்ட அவருடைய கண்களைக் கவனிக்க 2 வருடங்கள் கண் மருத்துவரிடம் அனுப்பப்பட்டார். பின்னர், அப்பள்ளியை விட்டு "வெஸ்ட் மினிஸ்டர்" பள்ளியில் சேர்ந்தார். அங்கு அவர் ஓரளவுக்கு மகிழ்ச்சியுடனும் கல்வியைத் தொடர்ந்தார். இளம் பிராயத்திலிருந்தே கவிதையிலும், கற்பனையிலும் அவருக்கிருந்த ஆர்வம் பெருகியது. வழக்குரைஞராவதற்காக கல்லூரி படிக்கச் சென்ற கூப்பர், அங்கு மனவுறுதியை இழந்து நோய்வாய்ப்பட்டார். ஆல்பன்ஸ் என்ற இடத்திலுள்ள டாக்டர் காட்டன் அவருக்குச் சிகிச்சை செய்து வந்தார். இவ்வாறு 8 மாதங்களை தம்முடைய மனச்சோர்வு நீங்க ஓய்வு எடுத்துக்கொண்டார்.

1763-ம் ஆண்டு எதிர்பாராத ஓர் நிகழ்ச்சி அவர் வாழ்க்கையில் குறுக்கிட்டது. ஒருநாள் அவர் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தபோது அங்கு போடப்பட்டிருந்த உட்காரும் பலகையொன்றின் மீது ஒரு திறந்த வேதபுத்தகம் இருக்கக்கண்டார். அன்று அவர் கண்களில் பட்ட யோவான் 11-ம் அதிகாரத்தை வாசித்தார்.

மரித்த லாசருவை உயிருடன் எழுப்ப வல்லமை மிகுந்த ஆண்டவரால் மனசோர்வில் இருக்கும் தம்மையும் உயிர்ப்பிக்கக்கூடும் என்ற உண்மை அவர் மனதில் உதித்தது. தொடர்ந்து வேதாகமத்தை வாசித்த அவருக்கு ரோமர் 3-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள “இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே மீட்கப்படுகிறோம்” என்ற பவுலடியாரின் வார்த்தையும், கூப்பர் பூரண விசுவாசத்திற்குள் மாறி, இரட்சிப்பின் அனுபவத்திற்குள் கடந்துவர உதவிசெய்தது. இப்படி பாவ நோய் மட்டுமல்ல, சரீர நோயும் குணமானது. திடீரென மனச்சோர்வு குணமானதைக் கண்ட டாக்டர் காட்டன் வியப்புற்றார்.

வில்லியம் கூப்பருக்கு நெருங்கிய நண்பர்கள் சிலரிருந்தனர். கனம் ஜான் நியூட்டன் என்பவரும், கனம் அன்வினும் அவருடைய மனைவியும் கூப்பருடைய நற்குணங்களைப் பாராட்டி, அவருடைய வாழ்க்கை வளம்பெற முயற்சிகள் செய்துவந்தனர். ஹாட்டிஸ்டன் என்னுமிடத்தில் அவருக்கு ஒரு வீடு அமைத்து, வேண்டிய வசதிகளை ஏற்பாடு செய்தனர். பின்னர் தனிமையாக இருந்த அவரை தங்களுடனேயே வசிக்கும்படி கேட்டுக்கொண்டனர். கூப்பரும், கனம் ஜான் நியூட்டனும் இணைந்து “ஓல்னி பாடல்கள்” (Olney Songs) என்று இருவரும் எழுதியப் பாடல்களைப் புத்தக வடிவில் வெளியிட்டனர். கூப்பருக்கு மனச்சோர்வும், சலிப்பும் ஏற்படாதவாறு பொழுதுபோக்குவதற்காக அவருடைய நண்பர்கள் சிறிய பிராணிகளையும், பறவைகளையும், பொன்னிற மீன்களையும் பரிசாக அனுப்பினார்கள். தோட்டவேலை செய்வதிலும், சித்திரங்கள் வரைவதிலும் அவருக்கு அதிகப் பிரியம். “கர்த்தாவின் அற்புதச் செய்கை புத்திக்கெட்டாததாம்” (God moves in a mysterious way), “இம்மானுவேலின் இரத்தத்தால்” (There is a fountain filled with Blood) என்று ஆரம்பிக்கும் பாடல்களும் இவரால் எழுதப்பட்டவையே.

1767-ம் ஆண்டு அவருடைய நண்பர் குதிரைச்சவாரி செய்யும்போது, குதிரையின் மேலிருந்து தூக்கி எறியப்பட்டு மரித்தார். 1796-ம் வருடம் அன்வின் அம்மையாரும் மரித்தார். சாதாரணமாகவே சிறு துன்பத்தையும் சகிக்க முடியாத இருதயம் கொண்ட கூப்பருக்கு, தன்னுடைய நல்வாழ்வை விரும்பி அதற்காகப் பாடுப்பட்டு வந்த அன்வின் தம்பதியரை இழந்தது ஒரு பேரதிர்ச்சியாக அமைந்தது. இதற்குப்பின் அவரது வாழ்க்கையும் வேகமாக இறுதிக்கட்டத்தை அடைந்தது. மரிப்பதற்கு முன் அவருடைய முகம் ஆண்டவரைத் தரிசித்தவர் போல பிரகாசமடைந்தது. சமாதானத்துடன் தன் ஆவியை ஆண்டவரின் கையில் ஒப்புவித்தார்.



உங்களுக்காக ஜெபிக்கும்,
திருமதி. செலின் சாமுவேல்,
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் வருஷத்தின் கடைசி மாதத்தில் நுழைய கர்த்தர் கிருபை செய்திருக்கிறார். அவரின் இரக்கங்கள் பெரிது.

கர்த்தருடைய கிருபையால் நமது வருடாந்திர அறுப்பின் பண்டிகை மிகவும் சிறப்பாக அமைய கிருபை செய்த தேவனைத் துதிக்கிறேன். சபை மக்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்தி நன்றி கூறிக்கொள்கிறேன். ஒரே குடும்பமாய் இணைந்து செயல்படவும், கர்த்தக்கு நன்றி சொல்லவும் ஒரு வாய்ப்பைக் கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த வருடம் Dhms.800,000/ காணிக்கை வர கிருபை செய்தார். இதற்காக பல மாதங்களாக ஜெபித்து உழைத்த Prayer Cell Leaders அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். அவர்களுடன் ஒத்துழைத்த சபைமக்கள் அனைவருக்கும் நன்றி.

Convenor ஆக செயல்பட்ட Mr.Hemanth Kumar அவர்களுக்கும், Food Coordinator Mrs.Irene Jeyaseelan அவர்களுக்கும், அவர்களுடன் இணைந்து செயல்பட்ட Mrs.Initha Moses மற்றும் Mrs.Gold Sheeba Sigamoni அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

Tent மற்றும் பல உதவிகள் செய்த Mr.Satheesh, Mr.Raja, Mr.Vairavan மற்றும் அவர்களுடன் இணைந்து பணியாற்றிய சகோதரர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். Youthல் இருந்து உதவிசெய்த குழுவினர்களுக்கும், நம் உடன் ஊழியரான திரு.சைமன் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

நமது ஆயர் Rev.Christopher அவர்களுக்கும் கமிட்டியின் சார்பாக நன்றி கூறிக்கொள்கிறோம். மூன்று வாரமாக அவர் நமக்குக் கொடுத்த ஆழமான செய்தியின் மூலம் கர்த்தரின் வார்த்தை நம்மில் கிரியை செய்ததை நம் அறுப்பின் பண்டிகையின் நிகழ்வுகளின் மூலம் நாம் கண்டோம். ஏலத்தை உற்சாகத்துடன் நடத்திக்கொடுத்த Mr.Rajkumar, Dr.Benjamin, Mr.Caldwell அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது வருடாந்திர Convention கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. ஒருநாள் தியான முகாமில் செய்தி கொடுத்து, ஆவிக்குரிய தெளிவுகளையும், செய்தியின் மூலம் பெலப்படுத்தி வழிநடத்திய Dr.Pushparaj அவர்களுக்கும் நன்றி. மனமுவந்து ஆசையுடன் அழைத்து உபசரித்த சபைமக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வருடமும் Interchurch Football போட்டிக்கு நம் சபையின் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பெரியோர்களை உற்சாகப்படுத்தி கலந்துகொள்ள ஒழுங்குகளைச் செய்த Mr.Rajan அவர்களுக்கும், அவர்களுடன் ஒத்துழைத்த Mr.Jose Albin, Mr.Manoj Kumar அவர்களுக்கும் நன்றி. பலவிதங்களில் ஜெபித்து, பண உதவிகள் மூலமாகவும் மிகவும் ஈடுபாட்டுடன் கலந்துகொண்ட சபைமக்களுக்கு நன்றி.

சிங் ரத்தினம், செயலர்.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Y.Lenin | 2553 | RAK |
| 2 | Mr. S.Sam Reni Durai | 2554 | Fujairah |
| 3 | Mr. S.Jesuraja | 2555 | Fujairah |
| 4 | Mr. D.Selvin | 2556 | RAK |
| 5 | Mr. Isravel Rethinadhas | 2557 | Fujairah |
| 6 | Mr. Anna Durai Muppan | 2558 | Fujairah |
| 7 | Mrs. Jeeva Joselin | 2559 | Fujairah |
| 8 | Mr. Bevin Shalom | 2560 | Fujairah |
| 9 | Mr. Joyson Arul | 2561 | RAK |
| 10 | Mr. S.P.Jeno | 2562 | Fujairah |
| 11 | Mr. C.Jobi Mon | 2563 | Fujairah |
| 12 | Mr. Robert Joshi | 2564 | Dubai |
| 13 | Mr. M.Aldrin | 2565 | Dubai |
| 14 | Mr. M.Pon Christopher | 2566 | Dubai |
| 15 | Mr. M.Victor | 2567 | Dubai |
| 16 | Mr. K.Antony Samson | 2568 | Dubai |
| 17 | Mr. John Michael Franklin | 2569 | Dubai |

## இயேசு பிறந்தார்

பிறந்தார் பிறந்தார் இயேசு
அவரோடு தினமும் பேசு
உன் பாவத்தை எடுத்து வீசு
உன்னைவிட்டு ஓடுவான் பிசாசு
உள்ளத்தை விட்டு நீங்கும் மாசு



நம் உள்ளத்தில் தங்குவார் வாசம்
அதுதான் இயேசுவின் பாசம்
நம்மைவிட்டு நீங்கும் மோசம்
தினமும் நம்மோடு அவர் நேசம்
நம்மைக் கொண்டு போகும் மோட்சம்



தினமும் வேதத்தை வாசிப்போம்
அதிக நேரம் ஜெபிப்போம்
எல்லா நேரத்திலும் அவரை நினைப்போம்
உலகத்தை எதிலும் ஜெயிப்போம்
பிறருக்கு ஆண்டவரைச் சொல்லுவோம்.

V.சுவாமிதாஸ்

# இயேசு பிறந்த நாள்

அருள்நாதர் இரட்சிக்கும் இருள்ராவில் இரக்கம்
ஒருதூதன் இறைச்செய்தி வயற்காட்டில் இறங்கவும்
அருகில்வந்த ஒளிவட்டம் திகில்கொண்ட மேய்ப்பர்ஆட்டம்
புரிந்துணர்ந்த தூதருள்ளம் பரிந்துரைக்கும் தைரியம்

பயப்படா திருங்கள் வயப்படும் மகிழ்ச்சி
தயவுடன் எல்லோரும் உய்வடையும் நற்செய்தி
வயலிடை மேய்ப்பர்தேடி வாய்மொழி வந்தாச்சு
தாவீதூர் பெத்தலையில் பிறந்தார் இயேசு



சத்திரத்தில் இடமில்லை ஆத்திரத்தில் வழியில்லை
பெத்துவிட்டாள் பிள்ளையை போர்த்திவிட்டாள் கந்தையை
மெத்தையில்லை கட்டிலில்லை தொட்டிலில்லை தாலாட்டில்லை
மாட்டுத்தொழுவில் புல்லணையில் கிட்டிவிட்ட படுக்கையில்

தூதுகேட்ட வானசேனை தூதருடன் தோன்றிற்று
தேவனுக்கு மகிமையும் பூமிக்கு சமாதானமும்
போதுமட்டும் மனிதர்மேல் பிரியமும் உண்டாகட்டும்
மனமகிழ்ந்து தேவன்மேல் கூட்டிசைத் துதிமுழக்கம்

குளிர்வானில் ஒளிர்செய்தி கீழ்தேசத்தில் மேல்நட்சத்திரம்
வழிகாட்டி ஒளிநடத்தி தொழுதெழுந்தார் ஞானிகளும்
உள்ளத்தில்ஒளி உதிரத்தில்களி புத்தொளியில் தோரணங்கள்
பிள்ளைகளும் பெற்றோரும் கிறிஸ்துதொழுகை மகிழ்ச்சிவழி.



ஆதாரம்
மத்தேயு
லூக்கா
யோவான்

கவிதை எண் : 182

கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்.
மத்தேயு 5:4

வாழ்நாள் முழுதும்
பாடுகளின்றி
இன்பமாய்
வாழ்ந்தாருமில்லை,
துன்பமே
தொடர்கதையாய்
வீழ்ந்தாருமில்லை.
துயரமென்பது
எந்த உருவத்தில்
எப்போது வருமென்று
எவருக்குமே
தெரியாது.
உலகப்பிரகாரமாக
உருவாகும்
துயரங்கள் பல.. பல..
இருக்கும்
பதவி இழந்து
தவிக்கும்போது
வரும் துயரம்...
அன்றாடம்
வாழ்விற்காக
அல்லல்படும்
துயரம்...
உற்றார்
உறவினரை பிரிந்து
தனிமையில்
தத்தளிக்கும்போது
உள்ளம்
உருகும் துயரம்...
வறுமையில்
வாடும்போதும்
வாலிபம் போய்
வயது முதிரும்போது
வந்து வருத்தும்
நோயால்
வரும் துயரம்...

காடு மேடென
அலைந்து
கடுமையான
குளிரும் தாங்கி
மலைவாழ்
மக்களுக்கு
உலக இரட்சகர்
இயேசுவின்
சுவிசேஷம் சொல்லி
உணர்த்தி
மனமாற்றம்
ஏற்படுத்தும்போது
ஏற்படும்
இன்னல்களை
ஏற்று வாங்கி
ஊழியம் செய்யும்
ஊழியக்காரரை
உலுக்கும் துயரம்...
இவ்வண்
துக்கம்
பலவிதம்
ஒவ்வொருவருக்கும்
ஒருவிதம்
அவர்களுடைய
கண்ணீர் யாவையும்
தேவன் துடைப்பார்
வெளிப்படுத்தின
விசேஷம் 21:4.
துக்கம்
உன்னை
விடாது
துரத்துகிறதா.. உன்
பக்கம்
கர்த்தர்
வருகிறாரென்று
அர்த்தம் கொள்.

அவர்கள்
சிந்தும்
கண்ணீரை
கர்த்தர்
துடைப்பார்.
அவர்களின் வாழ்வில்
ஆறுதல் வரும் - ஒரு
மாறுதல் வரும் - மன
தேறுதல் வரும்.
இன்னல்கள் - காலை
பனியென மறையும்.
இரட்டிப்பு
மகிழ்ச்சி வரும்.
கர்த்தர்
ஒளியானவர்
மாயை
இருளானது
கர்த்தர்
இருக்கும்
இடத்தில்
மாயைக்கு
இடமில்லை.
எவர் ஒருவரின்
இதயத்துக்குள்
சதாகாலமும்
கர்த்தர்
இருக்கிறாரெனில்
அவருக்கு...
இருள் விலகும்.
ஒளி பிறக்கும்.
மாயை மனதை
மயக்காது
தாழ்ச்சியில்லை -நல்
வாழ்வுண்டு
வாழ்வாங்கு
வாழ்வோமே...

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# தேவ அன்பு

உக்ரெய்ன் நாட்டில் ஊழியம் செய்த அமியா கால்செங்கோ என்பவர் சிறுபிள்ளைகளுக்கான முகாம் ஒன்றைத் திட்டமிட்டு, ஆண்டவருடைய அன்பு எத்தகையது என்பதை நடைமுறையில் விளக்க முற்பட்டார்கள். முகாமின் பல்வேறு இடங்களில், விதவிதமான சாக்லேட் மற்றும் விளையாட்டுப் பொருட்கள், பொம்மைகள் போன்றவற்றை வைத்து விட்டு, பிள்ளைகளிடம் இவை ஒன்றையும் அவர்கள் தொடக்கூடாது என்று கட்டளையிட்டார். ஆனால் நாவில் ஊறவைக்கும் தின்பண்டங்களைக் கண்டவுடன் பிள்ளைகளால் ஆசையை அடக்க முடியவில்லை. அவர்கள் எல்லோருமே விதிக்கப்பட்ட கட்டளையை மீறிவிட்டனர். மீறின பிள்ளைகள் மேல் குளிர்ந்த நீர் ஊற்றப்படும், அவர்கள் அதைப் பொறுத்துக் கொண்டு அசையாமல் நிற்கவேண்டும். இதுவே தண்டனை. ஆனால், அமியா அந்த பிள்ளைகளிடம், தம் அன்பினால் நம்மை மன்னித்து நமக்கு வர வேண்டிய தண்டனையை எப்படி இயேசு தம்மேல் ஏற்றுக்கொண்டார் என்பதை விளக்கினார். இப்போது நான் உங்களை மன்னிக்கிறேன். உங்களுக்கு பதில் நான் உங்கள் தண்டனையை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று சொன்னார். உடனே குளிரான நீர் அவர் மேல் ஊற்றப்பட்டது. அது கடுங்குளிர் காலம். எனவே அவர், ஆண்டவரே உம் அன்பை இந்த பிள்ளைகளுக்கு விளக்கும் இந்த முயற்ச்சியில் நான் சுகவீனப்பட்டு விடாமல் இருக்க உதவி செய்யும் என்று ஜெபித்தார். என்ன ஆச்சரியம்! அவர் மேல் கொட்டப்பட்ட அந்தக் குளிர்ந்த நீர் வெதுவெதுப்பான நீராக மாறியது. வெந்நீர் ஷவரில் குளிப்பது போல் அமியா நின்று கொண்டிருந்தார். பிள்ளைகளோ, தங்கள் மீறுதலுக்கான தண்டனையை ஆண்டவர் ஏற்றுக் கொண்டார் என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டு 60 பேர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். “நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது” - 1யோவான் 4:10. ஆம், கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடுகிற நாம், கிறிஸ்து வந்த நோக்கத்தைப் புரிந்திருக்கிறோமா? நம்மை தேவாதி தேவன் அதிகமாக நேசித்ததால் நம்முடைய பாவங்களிலிருந்து மீட்கத்தக்கதாக தமது ஒரே குமாரனையே நமக்குத் தந்தார். கிறிஸ்துமஸ் பண்டிகை என்று சொல்லிக் கொண்டு, நாம் நம் மன விருப்பத்தின்படி வாழ்கிறவர்களாக, அவருக்குப் பிரியமில்லாத காரியங்களில் ஈடுபட்டு மறுபடியும் மறுபடியும் அவரைச் சிலுவையில் அறையாதபடி, கிறிஸ்து நம் உள்ளங்களில் பிறந்திருக்கிறவராய், அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்படிந்து, அவருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ்ந்து, அவரில் உண்மையாய் அன்புகூர்ந்து அவர் பிறப்பை போற்றித் துதிக்க தேவன் தாமே நம் ஒவ்வொருவருக்கும் கிருபை செய்வாராக.

இவ்வளவாய் அன்பு வைத்த எம்பெருமானை - நாம்
எண்ணமுடன் போய் துதிக்க ஏகிடுவோமே
பெத்தலையில் பிறந்தவரை
போற்றித் துதி மனமே.

இனிதா மோசஸ்

# ஆராதனை பாடல்கள் - டிசம்பர் 2015

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப பாடல் : பாமாலை 103, கவி 1 எவ்வண்ணமாக
ஆராதனை இறுதி பாடல் : பாமாலை 205, கவி 3 கெம்பீரமாகவே

### 04-12-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 46 | இம்மானுவேலே வாரும், வாருமே |
| பாமாலை | 60 | ராக்காலம் பெத்லகேம் |
| கீர்த்தனை | 40 | இவரே பெருமான் |
| கீர்த்தனை | 48 | சமாதானம் ஓதும் |
| கீர்த்தனை | 18 | பாடித்துதி மனமே |



### 11-12-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 15 | போற்றிடு ஆன்மமே |
| கீர்த்தனை | 111 | பாவியாம் எனை மேவிப்பார் |
| பாமாலை | 61 | ராஜன் தாவீதூரிலுள்ள |
| கீர்த்தனை | 41 | கண்டேனென் கண் குளிர |
| கீர்த்தனை | 42 | அதி மங்கல காரணனே |
| கீர்த்தனை | 43 | ஆ! அம்பர உம்பர |



### 18-12-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 2 | அலங்கார வாசலாலே |
| பாமாலை | 181 | விருந்தைச் சேருமேன் |
| கீர்த்தனை | 54 | வாரும் பெத்லகேம் வாரும் |
| கீர்த்தனை | 51 | மாசில்லாத் தேவபுத்திரன் |
| கீர்த்தனை | 53 | ராசராச பிதா மைந்த |



### 25-12-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 59 | மெய் பக்தரே நீர் |
| பாமாலை | 53 | கேள்! ஜென்மித்த ராயர்க்கே |
| கீர்த்தனை | 44 | ஆதித் திருவார்த்தை |
| கீர்த்தனை | 49 | பெத்தலையில் பிறந்தவரைப் போற்றி |
| கீர்த்தனை | 50 | பெத்லேகம் ஊரோரம் சத்திரத்தை |
| கீர்த்தனை | 45 | ஆர் இவர் ஆராரோ |

"என் விண்ணப்பம் உமது சமூகத்தில் வருவதாக,
என் கூப்பிடுதலுக்கு உமது செவியைச் சாய்த்தருளும்" சங்கீதம் 88:2

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- நமது ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை, கன்வென்ஷன் கூட்டங்கள், தியான முகாம் யாவும் ஆசீர்வாதமாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக,
- மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனைக்கு அர்ப்பணமுள்ள செவிலியர் கிடைக்க ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக
- சுற்றியுள்ள நாடுகளில் வாழும் மக்கள் அமைதியோடும் சமாதானத்தோடும் வாழ கர்த்தர் கிருபை செய்ய வேண்டிக்கொள்வோம்.

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக,
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- நடைபெறவுள்ள நமது சபைகளின் பண்டிகை கால நிகழ்வுகள், பண்டிகை ஆராதனைகளின் ஆசீர்வாதத்திற்காகவும்
- ஃபுஜைரா கிளைச்சபையின் ஸ்தோத்திரப் பண்டிகையின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.

"கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து,
உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்." சங்கீதம் 85:7

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# தெரிந்த சத்தியம், தெரியாத உண்மை

தேவனாகிய கர்த்தர் ஆதாமையும் ஏவாளையும் ஏதேன் தோட்டத்தைவிட்டு வெளியேற்றியபோது, அவர்களுக்குத் தோலுடை கொடுத்தார். ஆதாம் மற்றும் ஏவாளுடைய மறைவுக்குப் பின் அது யாரேசின் குமாரனாகிய ஏனோக்கிற்கு கொடுக்கப்பட்டது. ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துவிட போய்விட்டதால், அது அவனது மகனாகிய மெத்தூசலாவை அடைந்தது. மெத்தூசலாவின் மறைவிற்குப் பின்பு நோவா அதை எடுத்து பேழைக்குள் கொண்டு வந்து வைத்து பாதுகாத்தான். நோவாவின் குமாரர் சேம், காம், யாப்பேத் என்பவர்கள், பேழையைவிட்டு வெளியேறும் போது, காம் அவ்வுடைகளை யாருக்கும் தெரியாமல் பத்திரமாக எடுத்து, தன் சகோதரருக்குத் தெரியாமல் ஒளித்து வைத்தான். காம் அதை தன்னுடைய குமாரனாகிய கூஷிடம் இரகசியமாய் கொடுத்தான். அது கூஷிடம் வெகுநாட்களாக இருந்தது. கூஷின் குமாரன் நிம்ரோத். கூஷ் தன் அன்பின் அடையாளமாக அதை தன்னுடைய குமாரனாகிய நிம்ரோத்திடம் கொடுத்தான்.



